සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

# முதலாந் தவணைப் பரீட்சை – ஏப்ரல் 2017

தரம் 08

அக்கரைப்பற்று வலய அதிபர்கள் சங்கம்
அக்கரைப்பற்று

புள்ளி

சுட்டெண்: .........................

## தமிழ் மொழியும் இலக்கியமும்

நேரம் : 1.30 மணித்தியாலம்

### பகுதி - I

- **பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**
  **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. மகன் தன் சுயபுராணத்தை விரிக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். இங்கு "சுய புராணம்" என்பதன் பொருள்,
    (1) புராணம் (2) கதை (3) சொந்தக்கதை (4) சோகக்கதை

02. இரண்டு கடிதங்கள் வெவ்வேறு ஊர்களிலிருந்து வந்தன. அவற்றில் ஒன்று இழவோலை இங்கு "இழ வோலை" என்பது
    (1) திருமண அழைப்பு (2) விருந்துக்கான அழைப்பு
    (3) சாவை அறிவிக்கும் கடிதம் (4) நலம் விசாரிக்கும் கடிதம்

03. ஓடைகள் பொங்கிட ஓடி வந்தேன். இதில் "ஓ" எனும் எழுத்து
    (1) மெய் எழுத்து (2) உயிர் நெடில் எழுத்து
    (3) உயிர்க்குறில் எழுத்து (4) உயிர் மெய் எழுத்து

04. ஐசுவரியம் என்ற சொல்லின் கருத்து,
    (1) அசதி (2) செல்வம் (3) காடு (4) குளிர்

05. தர்மம், கொடை, வண்மை, மறம், ஈகை இச் சொற்களுள் பொருள் வேறுபாடு கொண்ட சொல்
    (1) வண்மை (2) ஈகை (3) கொடை (4) மறம்

06. அவள் வானத்தைப் பார்த்தாள் இதில் "வானம்" என்பதன் எதிர்ப்பதம்,
    (1) வாணம் (2) ஆகாயம் (3) விசும்பு (4) பூமி

07. தாதிகள் சூழ வந்து தோழியுன்னைப் போற்றுவேன். இங்கு "தோழி" என்பதன் எதிர்ப்பாற் சொல்
    (1) தோலன் (2) தோழன் (3) தோளன் (4) தோமன்

08. வித்தை என்ற சொல்லுக்குரிய ஒத்த கருத்துச் சொல்,
    (1) காற்றாடி (2) கல்வி (3) இசை (4) சொல்

09. அடிமை வாழ்வு ஒழிக்கவென்றே அன்பு காந்தி சொன்னார். இதில் "அடிமை" என்பதன் எதிர்ப்பதம்
    (1) அடியாள் (2) ஆண்டான் (3) கூலிக்காரன் (4) தொழிலாளி



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

10. கம்பராமாயணம் எழுதியவர்?
(1) கம்பர் (2) பாரதி (3) புகழேந்தி (4) ஒட்டக்கூத்தார்

11. செம்மை, இனிமை, அகலம் இச் சொற்களைக் குறிக்கும் பெயர்ச் சொல் வகை,
(1) பொருட் பெயர் (2) காலப் பெயர்
(3) குணப் பெயர் (4) சினைப் பெயர்

12. பறவைகளின் இசைவாக்கம் எனும் கட்டுரையை எழுதியவர்
(1) கு அழகிரி சாமி (2) க. வேந்தனார்
(3) அ.ச. ஞான சம்பந்தன் (4) க. சச்சிதானந்தன்

13. அரக்கர் கோமான் என்பதன் கருத்து
(1) அரக்கர்களில் ஒருவன் (2) அரக்கர்கள்
(3) அரக்கர்களின் அரசன் (4) அரசன்

14. ஒரு வாக்கியத்தின் இறுதியில் இடப்படும் குறியீடு,
(1) காற்புள்ளி (2) முற்றுப் புள்ளி (3) முக்காற் புள்ளி (4) அரைப்புள்ளி

15. எதனையும் ஆராய்ந்தறிந்தே செய்தல் வேண்டும் என்ற கருத்தினை தரும் பழமொழி
(1) துள்ளிய மாடு பொதி சுமக்கும்
(2) இளமையில் கல்வி சிலையில் எழுத்து
(3) எலி வளையானாலும் தனி வளை வேண்டும்
(4) ஆழம் அறியாமல் காலை விடாதே

16. தசரத மன்னனின் மனைவிகளில் ஒருவர்,
(1) கண்ணகி (2) சீதை (3) கைகேயி (4) பாஞ்சாலி

17. தசரத மன்னனின் நான்காவது பிள்ளை (ஒரு பாட்டுடையான்) யார்?
(1) இராமன் (2) இலக்குமணன் (3) பரதன் (4) சத்துருக்கன்

18. ஆண்தகைக்கு இன்று அவதி இங்கு அவதி என்பதன் பொருள்
(1) இன்பம் (2) மகிழ்ச்சி (3) ஆனந்தம் (4) துன்பம்

19. "முள்ளி" என்பது
(1) காரணப் பெயர் (2) இடுகுறிப் பெயர்
(3) காரண இடுகுறிப் பெயர் (4) சினைப் பெயர்

20. இருட்டில் மனித பார்வையிலும் பத்து மடங்கு பார்வை கூடிய பறவை,
(1) கிளி (2) ஆந்தை (3) கோழி (4) புறா

(40 புள்ளிகள்)



agaram.lk

www.agaram.lk

## பகுதி - II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றை தெரிவு செய்து ஏறக்குறைய 150 சொற்களுக்கு குறையாது கட்டுரை எழுதுக.
   i) நீர் கண்டு களித்த இல்ல விளையாட்டுப் போட்டி
   ii) வாசிப்பு மனிதனை பூரண மனிதனாக்கும்
   iii) சூழலை பாதுகாப்போம்
   iv) காலைக் காட்சி

[20 புள்ளிகள்]

02. உமது பொழுது போக்கு பற்றி உமது நண்பனுக்கு அல்லது நண்பிக்கு 75 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

[15 புள்ளிகள்]

03. பின்வரும் சொற்களின் கருத்து வெளிப்படும் வகையில் வாக்கியம் அமைக்குக.
   i) ஆரணியம் :
   ii) மயானம் :
   iii) கோலம் :
   iv) எள்ளல் :
   v) ஆணை :

[10 புள்ளிகள்]

04. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   1) வியாபாரியின் கோபம் என்ற கதையில் வியாபாரி தன் மகன் மீது மிகுந்த கோபம் அடைந்தமைக்கான காரணம் யாது? [04 புள்ளிகள்]
   2) பரதன் சத்துருக்கனுக்கு ஆட்சிப் பொறுப்பை கொடுக்க எண்ணியமைக்கான காரணம் யாது? [04 புள்ளிகள்]
   3) பின்வரும் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது எனக் கூறுக.
      i. "ஐய, வேண்டுவது உண்டு அவ்வரம் தரற் பாற்று" [02 புள்ளிகள்]
      ii. "அழுந்து துன்பத்தினாய் நான் உனக்கு என் பிழைத்து உளேன்?" [02 புள்ளிகள்]
   4) "விஷத்தை உண்டவனைப் போல" எனும் உவமைத் தொடரை விளக்குக.
   5) கான் ஆள நில மகளை கைவிட்டுப்
      போனானை காத்து பின்பு
   போனானுக்கு ஒரு தம்பி போனவன் தான்
   * இப்பாடலில் நில மகளைக் கைவிட்டுப் போனவன் யார்? [03 புள்ளிகள்]

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk